**21.07.2026**

DVC.No. 02/2019 திருமதி.சுகந்தி த/பெ. கோவிந்தராஜ் PW1

**குறுக்கு விசாரணை (எதிர்மனுதாரர் தரப்பில்)**

எதிர்மனுதாரர் சுமதி, கலா ஆகியோருடன் திருமணம் தாண்டிய உறவில் இருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கலா என்பவரை எதிர்மனுதாரர் படிக்க வைத்தார் என நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் 2015ம் ஆண்டிலிருந்து எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்கிறேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வீட்டில் உள்ள பொருட்களை உடைத்து எனக்கு கொலைமிரட்டல் விடுத்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரை தாக்கி அவருக்கு காயத்தை ஏற்படுத்தி அது தொடர்பாக என் மீது கொள்ளிடம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது முதல் மகள் ஜெயஸ்ரீக்கு எதிர்மனுதாரர் தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. எனது இரண்டாவது மகள் ராஜஸ்ரீக்கு விவாகரத்து வழக்கில் எதிர்மனுதாரர் தான் கல்வி செலவினங்களை கொடுத்து வருகிறார் என்றால் எனது இரண்டாவது மகளுக்கு 10, 11, 12 ஆகிய வகுப்புகளுக்கு கல்வி செலவினங்களை கொடுத்துள்ளார். எனது மூத்த மகளை எதிர்மனுதாரர் தான் முதுநிலை பொறியியல் படிப்பு படிக்க வைத்தார் என்றால் சரியல்ல. நான் மண்டல காவல் துறை தலைவரிடம் பொய்யான சங்கதிகளை சொல்லி புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இலால்குடியில் கிளினிக் வைத்திருப்பதா பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நாங்கள் வசிப்பதற்காக தாளக்குடியில் ஒரு வீட்டை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நாங்கள் வசிப்பதற்கான வசிப்பிடம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 22ல் நான் விவாகரத்து வழக்கு இடைக்கால நிவாரணம் கோரி மனு செய்துள்ளதால் இந் வழக்கில் வாழ்க்கை

பொருளுதவி கோரிக்கையை வலியுறுத்தவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எங்களுக்கு வாழ்க்கை பொருளுதவி தேவைப்படுகிறது. நான் மின்சார துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். என்னை பராமரிப்பதற்கு தேவையான பொருளாதார வசதி என்னிடம் உள்ளது என்றால் எனக்கும், எனது மகள்களுக்கும் பொருளாதார உதவி தேவைப்படுகிறது. எதிர்மனுதாரர் கீரனூரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் தான் எதிர்மனுதாரரை அச்சுறுத்தி மன உளைச்சலலை ஏற்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் விவாகரத்து வழக்கிலும், இடைக்கால ஜீவனாம்சம் கேட்டுள்ளதாலும் ஜீவனாம்ச வழக்கிலும், ஜீவனாம்சம் கேட்டுள்ளதாலும், இந்த வழக்கிலும் ஜீவனாம்சம் கேட்டுள்ளதாலும் இந்த வழக்கில் நான் கோரிய ஜீவனாம்ச பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது பெயரில் எதிர்மனுதாரர் நாகமங்கலம், திருப்பட்டுர், கலப்பால் ஆகிய இடங்களில் வீட்டு மனைகள் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.07.21 11:57:33 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி